அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :113/2017
தேதி : 11/10/2017

## பெட்ரோல், டீசல் மீதான
## மாநிலங்களின் வரி குறைப்பு தற்காலிக நிவாரணமே!

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
## நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு 2 ரூபாய் குறைத்ததைத் தொடர்ந்து பாஜக ஆளும் மாநிலங்களான குஜராத், 4% மதிப்புக் கூட்டு வரியும், மஹாராஷ்டிரா பெட்ரோலுக்கு 2 ரூபாயும், டீசலுக்கு 1 ரூபாயும் குறைத்துள்ளன.

இதனால் மத்திய, மாநில அரசுகளுக்கு வருவாய் இழப்புதானே தவிர, எண்ணெய் நிறுவனங்களுக்கு வருவாய் இழப்பு இல்லை. மேலும் இச்சிறு சலுகை அளிக்கப்பட்டாலும் எண்ணெய் நிறுவனங்கள் தினமும் சிறுகச் சிறுக பெட்ரோல், டீசல் விலைகளை அதிகரித்துக் கொண்டு வரும் போது, சில தினங்களிலேயே பெட்ரோல், டீசல் விலைகள் பழைய நிலைக்கே திரும்பிவிடும். மத்திய, மாநில அரசுகள் அளித்திருக்கும் சிறு சலுகையின் பலன் நுகர்வோர்க்குத் தொடர்ந்து கிடைக்கவேண்டும் என்றால், எண்ணெய் நிறுவனங்கள் சில மாதங்களுக்காவது விலைகளை அதிகரிக்காமல் இருக்க வேண்டும். ஆனால், மத்திய அரசும், எண்ணெய் நிறுவனங்களும் இவ்விஷயத்தில் விடாப்பிடியாக, விலைகளை அதிகரிக்கும் மனப்போக்கிலேயே உள்ளன.

எனவே, மத்திய, மாநில அரசுகளின் விலைக் குறைப்பு என்பது தற்காலிக, அதுவும் மிகச் சிறிய அளவிலான நிவாரணம் மட்டுமே என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.
எண்ணெய் நிறுவனங்களின் லாபத்தை மட்டுமே கருத்தில் கொள்ளாமல், மக்கள் நலன் முக்கியம் என்று கருதினால், மத்திய அரசு, பெட்ரோலியம் பொருள்களை GST வரிவிதிப்பின் கீழ் கொண்டு வருவதே நிரந்தர நிவாரணமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com